பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 27 சனிக்கிழமை 13.01.2024 கதிர் 427

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை எதிர்த்து தேசிய மக்கள் சக்தி வழக்கு

### மக்களின் அடிப்படை சுதந்திரத்திற்கு எதிரானது என கொந்தளிப்பு

**ஆளும் தரப்புக் கொண்டு வரவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றும் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைவதாகவும் தெரிவித்து அச்சட்டத்திற்கு எதிராக நேற்று தேசிய மக்கள் சக்தி அடிப்படை உரிமைகள்மீறல்மனுவொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.**

**தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்த மனுவைத் தாக்கல் செய்தார். மனுத்தாக்கல்** ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்திற்குத் தயாராகிவிட்டார். அவர் பதவி ஏற்றது முதல் அதிகளவில் வெளிநாடுகளுக்குச் செல்வதையே வழக்கமாகிக் கொண்-டுள்ளார். உலக வர்த்தக மாநாட்டில் பங்கேற்பதற்காக சுவிற்சர்லாந்தின் லவோஸ் நகரத்திற்கு அவர் இன்று புறப்படுகின்றார்.

இந்தக் கூட்டத்தின்போது உலகத் தலைவர்களையும் தொழில் முதலீட்டாளர்களையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார். ரணில் பிரதமராக இருந்த காலங்களிலும் இந்த மாநாட்டில் தவறாமல் கலந்துகொண்டிருக்கிறார். இப்போது ஜனாதிபதியான பின்பும் அவர் இந்த மாநாட்டிற்குச் செல்வதை நிறுத்தவில்லை.

நாட்டின் பொருளாதார ☞2

## சபை விவாதம்

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தின் இரண்டாம்வாசிப்புமீதானவிவாதத்தை எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சபாநாயகரின் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றுள்ள நிலையில் அச்சட்டமூலம் தொடர்பில் மீளய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வங்குரோத்து அடைந்த ஒரு நாடாக இலங்கை அறிவிக்கப்படவில்லை

### இப்படிச் சொல்கிறார் நிதி அமைச்சின் செயலாளர்

இலங்கை நிதி வங்குரோத்து அடைந்தது என்று அறிவிக்கப் படவில்லை என்று நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடு வங்குரோத்து அடைந்தமைக்கான காரணத்தினைக் கண்டறிவதற்காக பொது ஜனபெரமுனவின்பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தலைமையிலான நாடாளுமன்ற விசேடதெரிவுக்குழுவின் முன்னிலையில் நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையில் நாடு நிதிவங்குரோத்துஅடைந்துவிட்டதாக அறிவிக்கவில்லை. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி, தெரிவு செய்யப்பட்டகடன்களைச் சிறிதுகாலத்துக்குபிற்போடுமாறு கடன் வழங்குநர்களிடத்தில் கோரிக்கை விடுத்திருந்தோம்

நாம் சர்வதேச நாணயநிதியத்தின்கடன் உதவித்திட்டத்திற்குச் செல்லும்போதே கடன் உதவித் திட்டத்துக்குச் செல்கின்றோம்,அதனால் எமக்கு கால அவகாசம் வழங்குங்கள் என்றே கடன் வழங்குநர்களிடம் கோரினோம் - என்றார் அவர்.

# 2023இல் வரி வருமானம் 80 சதவீதம் அதிகரிப்பு

2022 ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டு வரி வருமானம் 80 சதவீதம் அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பி.கே.என்.சமன்சாந்த தெரிவித்துள்ளார்.

அரசதகவல்திணைக் களத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

தற்போது இலங்கை வரலாற்றிலேயே அதிக வரி வருமானம் பெறப்பட்ட காலமாக 2023 பதிவாகியுள்ளது. கடந்த வருடத்தில் மொத்த வரி வருமானம் 1550.6 பில்லியன் ☞8

# 1 லட்சத்து 78 ஆயிரம் பேர் வரை இயற்கை இடர்களால் பாதிப்பு

வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை 1லட்சத்து 78 ஆயிரம் வரை உயர்வடைந்துள்ளது. இதில் அம்பாறை மாவட்டத்தில்அதிகளவாக 1லட்சத்து69ஆயிரம்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, பதுளை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை உள்ளிட்ட சில மாவட்டங்களிலும்வெள்ளம் மற்றும் மண்சரிவினால்மக்கள்பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவிலாறு குளத்தின் வான்கதவுகள்திறக்கப்பட்டுள்ளமையால் திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் ☞10

# புதிய எம்.பியாக வாசல பதவியேற்பு

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் உறுப்பினராக நயன வாசலதிலக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் பதவிப்பிரமாணம்செய்துகொண்ட பின்னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும்அவர்கையொப்பமிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் ☞10

# அமைச்சர் கெஹலியவிற்கு எதிராக சிஐடியில் முறையீடு

சர்ச்சைக்குரிய மருந்துக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குற்றப்புலனாய்வு ☞2

# இலங்கை அமைதிப் படையினர் பயணித்த ஹெலி விபத்தில்

### மத்திய ஆபிரிக்காவில் சம்பவம்: இழப்புகள் இல்லை

மத்தியஆபிரிக்காவில் அமைதி காக்கும் பணிகளில்ஈடுபட்டிருந்த இலங்கை விமானப் படையினர் பயணித்த ஹெலிகொப்டர் விபத்திற்குள்ளாகியுள்ளது.

இது தொடர்பில் விமானப்படை விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

எம்.ஐ. வகையை சேர்ந்த குறித்த விமானம் அந்நாட்டு நேரப்படி நேற்றுக் காலை 9.30 மணிக்குவிபத்திற்குள்ளாகியுள்ளது. எனினும், விமானப்படை வீரர்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை என அறிவிக் ☞2

# வியாபாரிகள் அதிருப்தி



திருநெல்வேலிச் சந்தையில் சிறு பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்லூர் பிரதேச சபையினால் தற்போது தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் தொடர்பாக அதிருப்தி தெரிவித்துள்ளனர். தமக்கு நல்லதொரு இடத்தினை ஒதுக்கி தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ☞10

# 20 லட்சம் சுற்றுலாவிகளை இந்த ஆண்டு எதிர்பார்ப்பு

சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்றுள்ள நிலையில் இந்த ஆண்டு சுமார் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும், இதன் மூலம் 06 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கப்படுவதாகவும் சுற்றுலாத் ☞8

# இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் சர்வதேச நாணய நிதியத்தினர் பாராட்டு



பொருளாதாரசீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் இலங்கையின் குறிப்பிடத்தக்கமுன்னேற்றத்திற்குசர்வேதசநாணய நியதியம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சாதகமான முன்னேற்றங்கள் சர்வதேச உத்தியோகபூர்வ மற்றும் தனியார் கடன் ☞2

# இலங்கையின் முன்னேற்றத்திற்கு ஜப்பானிய நிதி அமைச்சர் பாராட்டு

இலங்கை பொருளாதார ரீதியில் அடைந்துள்ள சிறந்த முன்னேற்றங்களுக்கு ஜப்பான் நிதி அமைச்சர் சுசூகி ஷூனிச்பாராட்டுதெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி மற்றும் பணவீக்க ☞2



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

நெருக்கடி நிலை காரணமாக இந்த மாநாட்டில் இலங்கையில் இருந்து யாரும் பங்கேற்கவில்லை. இப்போ-து நிலமையில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ரணில் அங்கு பறக்கிறார்.

லவோஸ் பயணத்தை முடித்துக்கொண்டு ஜனவரி 18 உகண்டா நாட்டுக்குச் செல்கிறார் ஜனாதிபதி. அங்கு அணிசேரா நாடுகளின் கூட்டம் நடக்கின்றது. அதில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு செல்கிறார். ஜனவரி 24 அவர் நாடு திரும்புவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

....................................

மகிந்த ராஜபக்ச தலைமையிலான மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று நடுக்கடலில் 'பார்ட்டி' நடத்தி மாட்டிக்கொண்டது. இந்த விவகாரத்தைஎதிர்க்கட்சித்தலைவர் வியாழக்கிழமைநாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தியதை அடுத்து அது காட்டுத் தீயாய் பற்றிக்கொண்டது.

நாட்டு மக்கள் எல்லோரும் பட்டினியிலும் துன்பத்திலும் உழல ராஜபக்சக்கள் தமது ஆடம் பரங்களையும் கொண்டாட்டங்களையும் இன்னும் கைவிடவில்லை என்று மக்கள் கொந்தளித்துப்போயுள்ளனர். எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போன்று, மகிந்தவின் மனைவி காலையில் வீதியில் நடைப் பயிற்சி செய்வதற்கு 8 மெய் காவலர்கள் உடன் செல்லும் வீடியோவும் வேறு வெளியாகி மக்களின் கோபத்தை இன்னும் எகிறச் செய்துள்ளது.

தமது முறைகேடான முடிவுகளால் நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டைச் சீரழித்துவிட்டு அதனால் ஏற்பட்ட சுமையைவரிஅதிகரிப்புக்கள்மூலம் அப்பாவி மக்கள் மீது சுமத்திவிட்டு தாம் மட்டும் சுகபோகங்களில் திளைக்கிறார்கள்என்றுசாடுகிறார்கள் மக்கள்.

விடயம்பூதாகாரமாகிவிட்டதைத் தொடர்ந்து கப்பலில் நடுக்கடலில் நடந்த 'பார்ட்டி' தொடர்பான வீடியோ எப்படி வெளியே சென்றது என்பது தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (சிஐடி) உத்தரவிட்டிருக்கிறாராம். நாட்டுக்கு மிக அவசியமான அவசரமான நடவடிக்கை பாருங்கள்.....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வற்வரியை அதிகரித்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளை ஆளும் தரப்பு அதிகரித்துள்ளது. இதனை எதிர்த்து நாட்டு மக்கள் எதிர்ப்பை தெரிவித்து வீதிக்கு இறங்குவார்கள் இதனை தடுப்பதற்காகவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் என்பன கொண்டு வரப்பட்டுள்ளன.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்கடந்தசெவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் எதிர்வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் விவாதத்தக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

நாட்டு மக்களை அடக்கும் சட்டமூலத்தைசமர்ப்பிப்பதன்மூலம் ஆளும் தரப்பு புதிய வருடத்தை ஆரம்பித்துள்ளது. நிகழ்நிலை காப்புச் சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்பன நாட்டு மக்களின் பேச்சு சுதந்திரத்துக்கு முற்றிலும் எதிரானது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்குஎதிராகஉயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம். நாட்டு மக்களின் அடிப்படை பேச்சு உரிமை மற்றும் கருத்து சுதந்திரத்தைபாதுகாக்கும்வகையில் உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை வழங்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தில் (சிஐடி) நேற்று முறைப்பாடு முன்வைத்துள்ளனர்.

நாடாளுமன்றஉறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, வசந்த யாப்பா பண்டார மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இந்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளனர்.

தமது முறைப்பாடு தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இலங்கையின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிகாட்டிகளில் காணக்கூடிய முன்னேற்றங்களை சுட்டிக்காட்டிய ஜப்பான் நிதியமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சரியான பொருளாதார வேலைத்திட்டத்தின் பலனாகவே அந்த முன்னேற்றங்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜப்பான் நிதியமைச்ச ர் SUZUKI Shunichi, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஜப்பான்-இலங்கைபொருளாதார உறவுகளைபலப்படுத்திக்கொள்ளும் நோக்கிலேயே ஜப்பான் நிதி அமைச்சர் இலங்கைக்கு இருநாள் உத்தியோகபூர்வ பயணமாக வந்துள்ளார்.

இலங்கையின்பொருளாதரத்தை நிலைப்படுத்தி மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் கடன் நிலைப்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தி பல்வேறு சிறப்பான பொருளாதார மறுசீரமைப்புக்களை மேற்கொண்டிருப்பதாக ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கசுட்டிக்காட்டினார்.

அதேநேரம் இலங்கையின் கடன் நீட்டிப்பு முயற்சிகளுக்கு ஜப்பான் வழங்கிய சிறப்பான ஒத்துழைப்புக்கும்ஜனாதிபதிரணில் விக்ரமசிங்க நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கு ஜப்பான் யென்களாக வழக்கப்பட்டுவந்த கடன்கள்இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் ஜப்பான் நிதி அமைச்சர், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் சங்கத்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும்சர்வதேசநாணயநிதியத்தின் மேற்பார்வையின் பின்னர் கடன் நிலைத் தன்மை தொடர்பில் அறிவிப்பு விடுத்த பின்னர் மேற்படி கடன்களைமீளவழங்கும்இயலுமை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் கடல் பாதுகாப்பு தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும், இலங்கையின் எதிர்கால பயணத்திற்காக ஜப்பானினால் வழங்க முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஜப்பான் - இலங்கை தொடர்புகளை மேலும் பலப்படுத்த, தான்அர்பணிப்புடன்செயற்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, புதிய பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

வர்த்தக துறையை சிறந்த மட்டத்தில் பாதுகாப்பதற்கு ஏற்றுமதி தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமெனதெரிவித்தஜனாதிபதி, இலங்கைக்கானபுதியபொருளாதார முறைமை தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாகவும்தெரிவித்தார்.

இதன்போது இலங்கையின் கடன் நீடிப்பு செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் விளக்கமளித்த இலங்கைதரப்பினர், கடன்நீடிப்பைஇவ்வருடத்தின்முதற் காலாண்டில் நிறைவு செய்வதே இலங்கையின் இலக்காகும் என தெரிவித்தனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீள் நிர்மாண பணிகள் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டதோடு, ஜப்பான் நிதி உதவியில்ஆரம்பிக்கப்பட்டுதற்போது இடைநடுவில்கைவிடப்பட்டிருக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஜப்பான் தூதுக் குழுவினர் மற்றும் இலங்கை சார்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குநர்களிடையே உலகளவில் நம்பிக்கையை அதிகரிக்கின்றன என்றும் அந்நிதியம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மற்றும்சர்வதேசநாணயநிதியத்தின் பிரதிநிதிகளுக்குஇடையில்ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடந்த சந்திப்பில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடனான முதலாவது மீளாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு வாழ்த்து தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, ஜனாதிபதியின் தலைமையில் இலங்கை ஆளும் தரப்பு மேற்கொண்ட சவாலான பொருளாதார சீர்திருத்தங்களைப் பாராட்டியது.

ஆசியாவின் முன்னோடி முயற்சியான ஆட்சியைக் கண்டறியும் அறிக்கையை வெளியிடுவதில் இலங்கையின் முயற்சிளைஇதன்போதுபாராட்டினர்.

குறிப்பாக, கொள்கை சார்ந்த விடயங்கள் மற்றும் நிதித்துறையில் ஸ்திரத்தன்மைஆகியவைசர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தால் ஊக்குவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச நாணயநிதியத்தின்இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.

2022ஆம்ஆண்டின்இரண்டாம் காலப்பகுதியில் பணியாளர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின்படி இலங்கை நம்பிக்கையுடன் அரசாங்க வருமானத்தை உயர்த்தியுள்ளதாக சமீபத்திய சந்திப்பில் தெரிய வந்துள்ளதாகவும், அதன் மூலம் சர்வதேசசமூகம், உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்கள்மற்றும்தனியார் கடன்வழங்குநர்களின் நம்பிக்கை அதிகரிக்க காரணமாக உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள்குழுசுட்டிக்காட்டியுள்ளது.

பணவீக்கத்தை கணிசமாகக் குறைப்பதில் இலங்கையின் வெற்றியை, பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டதாகவும், நிதியியல் கொள்கை மற்றும் செலவுகளைக் குறைக்கும் இலங்கை அரசின் கொள்கைகளே அதற்கு காரணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நாட்டின்வெளிநாட்டுக்கையிருப்பு அதிகரிப்பு போன்ற சாதகமான முடிவுகள் தொடர்பிலும் சர்வதேச நாணயநிதியம்அவதானித்துள்ளது.

குறிப்பாக மூலதனம் மற்றும் பொறிமுறைஉருவாக்கம்,மூன்றாம் காலாண்டில் பொருளாதார வளர்ச்சிக்குபங்களித்துள்ளதாகவும், தற்போதுள்ள ஆட்சிப் பொறிமுறையின் சீர்திருத்தங்களில் இது சாதகமான குறிகாட்டிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் அதன் வரவிருக்கும் முறையான மறு ஆய்வு மற்றும் கட்டுரை 04 ஆலோசனையைத் திட்டமிட்டுள்ள நிலையில், புதிய அரச நிதி மேலாண்மைச் சட்டம், அரச-தனியார் கூட்டிணைவு தொடர்பான சட்டத்துடன் ஏற்படக்கூடிய முரண்பாடுகள், மின்சாரக் கட்டணங்கள் மற்றும் சொத்து வரிவிதிப்பு ஆகியன இலங்கை கவனம்செலுத்த வேண்டிய முக்கிய பகுதிகள் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், தற்போதைய சீர்திருத்தங்கள், நிதி சிக்கல்களைத் தீர்ப்பது மற்றும் நிர்வாக நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் உடனடி கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினர்.

வங்கிச் சட்டத்தில் திருத்தங்கள் மற்றும் வங்கித் துறையின் மறுமூலதனமாக்கல் உள்ளிட்ட நிதி விடயங்களில் துரித கவனம் செலுத்த வேண்டிய அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

ஆட்சிப் பொறிமுறையில் கவனம் செலுத்துதல், ஊழல் தடுப்பு ஆணைக்குழுவைஅமுல்படுத்துதல் மற்றும் அது தொடர்பான செயல் திட்டங்களை வெளியிடுதல் மற்றும் அதன் ஆணையாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையைப் புரிந்துகொள்வதற்காக அரசியலமைப்பு பேரவையுடனான சந்திப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களில் வெற்றியை அடைவதற்கு அரச ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, திறன்அபிவிருத்தியில்இலங்கையின் பங்காளித்துவமும்சர்வதேசநாணய நிதியத்தால் மதிப்பீடு செய்யப்பட்டது.

சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதில் முக்கியமான அரச சேவையின் திறனை வளர்ப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கமைய, இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் வாரங்களில் இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில், இந்த முக்கிய பகுதிகள் குறித்து ஆழமாக கண்டறியும் எதிர்பார்ப்பில், இலங்கை அதிகாரிகளுடன் மேலும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள உள்ளனர்.

இது தொடர்பான விரிவான பகுப்பாய்வு மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் பொருளாதார சீர்திருத்த செயல்முறையின் முன்னேற்றம் மற்றும் சவால்கள் தொடர்பில் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுவதாக இதன்போது குறிப்பிடப்பட்டது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, பொருளாதார விவகாரங்களுக்கானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்தினய வங்கியின் ஆளுநர்கலாநிதிநந்தலால்வீரசிங்க, உள்ளிட்ட அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக விமானம் விபத்திற்குள்ளதோடு சம்பவம் தொடர்பில் கடற்படைத் தளபதியின் ஆலோசனைக்கு அமைவாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# மருந்து மோசடியுடன் தொடர்புபட்டவர்களை பாதுகாத்த அனைவருமே தேசத்துரோகிகள்

## சஜித் பிரேமதாஸ சாட்டை



மருந்து கொள்வனவு திருட்டில் ஈடுபட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியவையும் இந்தக் குழுவையும் பாதுகாக்க 113 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கைகளை தூக்கினர். இந்த 113 பேரும் நாட்டுத் துரோகிகள், தேசத் துரோகிகள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் மந்தபோசணையை இல்லாது செய்வது தொடர்பில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசாங்கத்தின் புள்ளிவிவர தகவல்களின் பிரகாரம், நாட்டில் 60 வீத குடும்பங்களின் வருமானம் குறைந்துள்ளதுடன், 91 வீத செலவினங்கள் அதிகரித்துள்ளன.

பொருளாதார வங்குரோத்து நிலையால் 22 வீத குடும்பங்கள் கடனால் பாதிக்கப்படும் போது, 3 முதல் 21 வயது வரையி லான பாடசாலை செல்லும் வயதினரில் 54.9 வீதமானவர்கள் பொருளாதார வங்குரோத்து நிலையால் பெரும் பாதிப்புகளைச் சந்தித்துள்ளனர்.

7 வீதமான மக்கள் தமது சுகாதார தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் வழமைக்கு மாறான போக்கைக் கையாண்டு வரும் நிலையில்,நாட்டில் பரிதாபகரமான மற்றும் அவலகரமான நிலைமைகள் உருவெடுத்துள்ளன.

இந்நிலையில் நாட்டை வங்குரோத்தடையச் செய்த குழுவினரால் நாட்டை சரியான முறையில் கட்டியெழுப்ப முடியுமா இல்லையா என்பது துறைமுக அதிகார சபையின் கப்பல்களைப் பயன்படுத்திக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடல் நடுவில் நடத்திய விருந்து கொண்டாட்டத்திலிருந்து புலப்படுகிறது. நாட்டு மக்கள் நிம்மதி இழந்து இருக்கும் இவ்வேளையில் நாட்டு மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தி கடலில் மதுபான விருந்து கொண்டாட்டங்களை நடத்தும் கேவலமான அரச ஆட்சியே நாட்டில் இருக்கிறது.

அத்துடன் தரமற்ற ஹியுமன் இம்யூனிகுளோபியுயின் மருந்து கொள்முதல் ஊழல் உட்பட இந்நாட்டிலிருந்து மருந்துகளைத் திருடிய அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை முன்னெடுத்துச் சென்றாலும்,இந்தத் திருட்டில் ஈடுபட்ட முன்னாள் சுகாதார அமைச்சரையும் இந்தக் குழுவையும் பாதுகாக்க 113 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கைகளை தூக்கினர். இந்த 113 பேரும் நாட்டுத் துரோகிகள், மக்கள் துரோகிகள். இந்த 113 பேரும் திருட்டுக்கு மோசடிக்கு ஆதரவாக முன் நிற்கிறார்கள்.

2020 இல் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய 100 மில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்ள கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் மறுத்த போது வாயை மூடிக்கொண்டு இருந்த அமைச்சர் பந்துல குணவர்தன, தற்போது சர்வதேச நாணய நிதியம் கூறுவதற்கு இணங்கி அவ்வாறே முன்செல்வோம் என கூறுவது ஆடை அணிந்து கொண்டா எனக் கேட்கிறோம்.

ஆனால் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை முன்னிலைப்படுத்தி மக்களை நெருக்குவாரங்களுக்கு உட்படுத்தி வருகிறது, வற்வரடியை அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கவில்லை. ஆனால் அரசாங்கத்துக்கு அரச வறுமானத்தை அதிகரித்துக்கொள்ள வழி தெரியாமல் மக்கள் மீது வரிக்குமேல் வரி அதிகரித்துள்ளது. மக்களின் கஷ்டம் இந்த அரசாங்கத்துக்கு விளங்குவதில்லை. - என்றார். (05)

# முதல் காலாண்டுக்குள்ளேயே வெளிநாட்டு கடன் சீரமைப்பு

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் நம்பிக்கை

வெளிநாட்டு கடன்களை முதல் காலாண்டுக்குள் மறுசீரமைத்து இரு தரப்பு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளோம். வரி வலையமைப்பை விரிவுப்படுத்துவதற்காகவே 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வரி கோப்பு ஆரம்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

வரி கோப்பு ஆரம்பிக்கும் அனைவரும் வருமான வரி செலுத்த வேண்டியதில்லை. வருடாந்தம் 12 லட்சம் ரூபா சம்பளம் பெறுபவர்கள் வருமான வரி செலுத்த வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாழ்க்கை செலவு அதிகரிப்பு மற்றும் மந்த போசணை பாதிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதார மீட்சிக்காகத் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் நடுத்தர மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பதை ஏற்றுக்கொள்கிறோம். கடுமையான தீர்மானங்கள் தற்காலிகமானதே நிலையான தீர்வை நிச்சயம் பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

ஸ்ரீதேசிய மற்றும் பொருளாதார காரணிகளால் கடந்த ஆறு காலாண்டுகளாக பொருளாதாரம் ஒடுக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டு இறுதி காலாண்டில் பொருளாதார வளர்ச்சி சாதகமான நிலையில் முன்னேற்றமடைந்தது. 2024 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சியை இரண்டு சதவீதத்தால் மேம்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளைக் கடுமையான சூழலுக்கு மத்தியில் செயற்படுத்தியுள்ளோம். அந்தத்; தீர்மானங்களால் நாடு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. பரிந்துரை திட்டங்களை எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு வரை செயற்படுத்த வேண்டும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தற்போதைய மறுசீரமைப்புக்களை இடைநிறுத்தினால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலையடையும். இதனை எவராலும் தடுக்க முடியாது.

மறுசீரமைக்க முடியாத அளவுக்கு நாட்டின் அரசமுறை கடன் காணப்படுகிறது.இலங்கையின் கடன்களைநிலைபேறானதன்மைக்குஉறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்காகக் காணப்படுகிறது. வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதற்கு இருதரப்பு மற்றும் பல்தரப்பு பேச்சுகளில் ஈடுபட்டுள்ளோம். வெளிநாட்டு கடன்களை முதல் காலாண்டுக்குள் கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளோம்.

வரி வலையமைப்பை விரிவுபடுத்துவதற்காக 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வரி கோப்பை ஆரம்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வரிகோப்பை ஆரம்பிப்பவர்கள் அனைவரும் வருமான வரி செலுத்த வேண்டிய தேவையில்லை. வருடாந்தம் 12 லட்சம் வருமானம் பெறுபவர்கள் மாத்திரம் வரி செலுத்த வேண்டும். ஆகவே குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தற்போது அமுல்படுத்தியுள்ள மறுசீரமைப்புக்களை மாற்றியமைக்கப் போவதில்லை. - என்றார். (05

# அஸ்வெசும நலன்புரி இரண்டாம் கட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் குறித்தும் அவதானம்

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயற்படுத்தும் போது பெருந்தோட்ட மக்கள் குறித்து விசேட கவனம் செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்களின் சம்பளம் தொடர்பில் ஜனாதிபதி நேரடியாக பேச்சில் ஈடுபட்டுள்ளார். வெகுவிரைவில் சாதகமான தீர்மானம் எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாழ்க்கைச் செலவு உயர்வு மற்றும் மந்த போசனை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுக்குமார், அரச சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.அத்துடன் வைத்தியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பெருந்தோட்ட மக்களுக்கு 1000 ரூபா நாளாந்த சம்பளம் வழங்கப்படுகிறது.வற் வரி 18 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளநிலையில்அத்தியாவசியஉணவு பொருள்களின் விலைகள் மூன்று மடங்காக அதிகரித்துள்ளன.ஆனால்பெருந்தோட்டமக்களின்சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ள நிலையில் ஏன் பெருந்தோட்ட மக்கள் குறித்து கவனம் செலுத்தவில்லை என நிதி இராஜாங்க அமைச்சரிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்கு எழுந்து பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் முன்வைத்த விடயங்களை ஏற்றுக்கொள்கிறோம்.

பொருளாதார பாதிப்பால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வரவுசெலவுத்திட்டத்தின்தீர்மானத்துக்குஅமைய அரச சேவையாளர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.இந்த அதிகரிப்பை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பொருளாதார நிலைமை சாதகமாக உள்ளதால் இந்த மாதம் 5000 ரூபாவை முதல் தவணையாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயற்படுத்தும் போது பெருந்தோட்ட மக்கள் குறித்து விசேட கவனம் செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.பெருந்தோட்ட மக்களின் சம்பளம் தொடர்பில் ஜனாதிபதி நேரடியாக பேச்சில் ஈடுபட்டுள்ளார். வெகுவிரைவில் சாதகமான தீர்மானம் எடுக்கப்படும். - என்றார். (05)

# மருந்துக் கொள்வனவு மோசடி தொடர்பில் உரிய விசாரணை இடம்பெற்று வருகிறது

## சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண உறுதி



மில்லியன் கணக்கான மக்களை வாழவைக்கும் நாட்டின் இலவச சுகாதார சேவை தொடர்பில்மக்கள்நம்பிக்கையை சீர்குலைக்கும் பிரசாரங்கள் தவிர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் மருந்து கொள்வனவின்போது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் மோசடிகள் தொடர்பில் குற்றத்தடுப்பு பிரிவு விசாரணை அதிகாரிகளால் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஹோவிதானகேஎம்.பி. எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஹோ விதானகே எம்.பி. தமது கேள்வியின் போது -

அரசாங்க வைத்தியசாலைகளுக்கு மருந்துகளைக் கொள்வனவு செய்யும் போது ஏற்பட்டுள்ள மோசடிகள் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் அமைச்சின் செயலாளர் தகவல்களை வெளியிட்டுள்ள நிலையிலும் அமைச்சருக்கு எதிராக எத்தகைய சட்டரீதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அமைச்சரவை ஊடாக அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளநடவடிக்கை என்ன என்பதை அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும்.

அத்துடன்தரமற்ற மருந்துகள் தொடர்பில் சமூகத்தில் பெரும் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், அது தொடர்பில் சுகாதாரஅமைச்சின்நிலைப்பாடு என்ன? - என்றார்.

அது தொடர்பில் அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் -

சுதந்திர இலங்கையில் மில்லியன் கணக்கான நோயாளர்களுக்கு தரமான மருந்துகளை பெற்றுக் கொடுப்பதில் தொடர்ந்தும் சுகாதார அமைச்சு சிறப்பாக சேவைகளை வழங்கி வருகிறது.

சிறந்த மருந்துகளை பெற்றுக் கொண்டு நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் ஆரோக்கியமானவாழ்க்கையைத் தொடர்வதையும் குறிப்பிட வேண்டும். நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் இந்த நாட்டில் நபர்களின் ஆயுட்காலம் 42 வயதாகவே காணப்பட்டது. நாட்டில்சிறந்த சுகாதார சேவை பலமானதாக முன்னெடுத்து வரும் நிலையிலேயே அது 78 வயதாக அதிகரித்துள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

அனைத்து சத்திர சிகிச்சைகளும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. மில்லியன் கணக்கான மக்களுக்கு தொடர்ந்து இலவசமாகவே மருந்துகள் வழங்கப்படுகின்றன.

இந்த செயற்பாடுகளில் சிறு தவறுகள் இடம் பெறலாம். எனினும் அதனை வைத்து சுகாதாரத் துறை மீதான மக்கள் நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை பொருத்தமற்றது. அனைவரும் இணைந்து அந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே அவசியமாக உள்ளது.

மருந்து மோசடி செயற்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சிஐடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் அதில் தலையிட்டு உரிய முறையில் அந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அது தொடர்பான சட்டபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான பொறுப்பு சட்டத்துறை சார்ந்த சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

சிறு சிறு தவறுகளை வைத்து முழுமையான சுகாதார சேவை தொடர்பிலும் அவநம்பிக்கையை ஏற்படுத்துவது சிறந்ததல்ல. - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## யுக்தியவின் பயன் என்ன?

**கொழும்பு 12, கெசல்வத்த பகுதியில் உள்ள வீடொன்றினுள் வியாழக்கிழமை இரவு கூரிய ஆயுதத்தினால் தாக்கி ஒருவர் கொல்லப்பட்டார். மாதீஸ் ஒழுங்கயை0ல் வசிக்கும் 48 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.**

**பாதாள உலகக் குழுவினரே இந்தக் கொலைக்குக் காரணம் என்று காவல்துறையினர் தெளிவாகச் சொல்கின்றனர். கெசல்வத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் கும்பலைச் சேர்ந்த 'கெசல்வத்த தனுக' என்ற நபருடன் தொடர்புடையவர்களே இந்தக் கொலையைமேற்கொண்டுள்ளதாகவிசாரணைகள் தெரிவிக்கின்றன.**

**2023 ஆடி மாதக் கடைசி நாளில் நடந்த ஒரு கொலைக்குப் பழிவாங்குவதற்காகத்தான் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. வியாழக்கிழமை கொல்லப்பட்ட'பொடிகவி' எனஅழைக்கப்படும்கவிந்த டில்ஷான், வேறு கொலைகள் பலவற்றுக்கான துப்பு வழங்கி வருபவர் என்றும் இவருக்கும் பல கொலைகளில் தொடர்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

**ஆகமொத்தத்தில்இந்தக்கொலைபாதாளஉலகக் குழுவினரின் தெளிவான பழிவாங்கல் கொலை என்பதுதெளிவாகின்றது.ஆளும்தரப்பால்மூர்க்கமாக முன்னெடுக்கப்படும்'யுக்திய' நடவடிக்கையின்போதே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. இது ஆளும் தரப்புக்கு நேரடியாகச் சவால்விடும் பாணியிலானது.**

**போதைப் பொருள் கடத்துபவர்கள், விற்பவர்கள், நுகர்பவர்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பாதாள உலகக் குழுவினரை ஒழிப்பதற்குமாகத்தான் 'யு-க்திய' நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் தெரிவித்திருந்தார். இந்த நடவடிக்கையின் கீழ் பல ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள். அப்படியிருந்தும் பாதாள உலகத்தின் பழிவாங்கல் கொலைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றது என்பது ஆளும் தரப்பின் நடவடிக்கை வெறும் வேடம் என்பதை அம்பலப்படுத்தியுள்ளது.**

**பாதாள உலகக் குழுவினரைக் கட்டுப்படுத்தும் 'யுக்திய' நடவடிக்கையின் தோல்வியே அந்த நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கும்போதே ஆளும் தரப்புக்குச் சவால் விடுக்கும் வகையில் வியாழக்கிழமை நடத்திருக்கக்கூடிய கொலை.**

**பாதாள உலகத்தைக் கட்டுப்படுத்துவதில் மட்டுமல்ல போதைப் பொருள் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதிலும் நிலமை இதுதான். இதுவரை கைதுசெய்யப்பட்ட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரில் போதைப் பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட முக்கிய நபர்கள் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. சில்லறை வியாபாரிகளும் நுகர்வோரும் இடைநிலைத் தரகர்களும் மட்டுமே இதுவரைகைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்களைக் கைது செய்வதன் மூலம் மட்டும் போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்திவிட முடியாது.**

**அரசியல் செல்வாக்கும் அதிகார வர்க்கத்தின் அனுசரணையும் இருக்கும்வரை யுத்திய போன்ற நடவடிக்கைகளால் போதைப் பொருள் வியாபாரம் மற்றும்பாதாளஉலகக் குழுக்களை கட்டுப்படுத்துவது ஆளும் தரப்புக்குச் சாத்தியம் இல்லை என்பதையே வியாழக்கிழமை கொலை நிரூபிக்கின்றது. 'யுக்திய' நடவடிக்கையின் தோல்வியையே அது குறித்து நிற்கின்றது.**



# சோம்பல் தவிர்ப்போம்!

**என்.பத்ரி**



நாம் ஒவ்வொருவரும் அன்றாடம் பல்வேறு பணிகளை செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். சிலவற்றை விரும்பியும், சில வற்றை கட்டாயத்தின் பேரிலும் செய்கிறோம். சிலா பணிகளை உடனுக்குடன் செய்வா; சிலா காலக்கெடுமுடியும்நேரத்தில்செய்வா. காலம்கடந்து செயலாற்றி சிக்கலில் சிக்கிக்கொள்பவாகளும் உண்டு.

பயணங்களுக்காகமுன்பதிவுசெய்யும்போதும், தோவுக் கட்டணம், மின்கட்டணம் செலுத்துதல் போன்ற செயல்பாடுகளிலும் நமது கடைசி நேர முயற்சி பயனளிக்காமல் போவதையும் பார்க்கிறோம். பல நேரங்களில் இவற்றிற்கான காரணம்நமதுசோம்பல்குணமாகவேஇருக்கிறது.

புகழ்பெற்றஉளவியல்நிபுணாசிக்மண்ட்பிராய்ட், மனிதாகள் இன்பத்தைக் கண்டறிவதற்கான சரியான வழி சோம்பல் என்று வாதிடுகிறார். எந்த ஒரு வேலையையும் செய்ய மனமில்லாமல் உடலுக்கு மட்டுமே சுகம் கொடுக்கும் ஒரு அனுபவம்தான் சோம்பல். சோம்பல்ஒருமுறைமனதிற்குள்நுழைந்து விட்டால், அதன்பின் அதனுடைய ஆதிக்கத்தைத் தவிர்க்க முடியாது.

சோம்பல் என்பது நமது வரையறுக்கப்பட்ட காலத்தை வீணாக்குகிறது. இது மிகவும் ஆபத்தானது. இதனால், நாம் செய்ய வேண்டிய முக்கிய பணிகள்கூட புறக்கணிக்கப்படுகின்றன. ஒரு பணி தேவையற்றதாகக் கருதப்படும்போது, தொடாபுடைய நபரின் சோம்பலின் அளவும் அதிகரிக்கிறது.

சோம்பல் நமது வாழ்க்கையில் பிரச்னைகளை அதிகரிக்கவே செய்கிறது. நாம் எதை அடைய விரும்புகிறோமோ அதை அடைவதற்கு நமக்கு வாய்ப்புகள் தேவைப்படுகின்றன. சோம்பல் நமது சாதனைக்களுக்கான வாய்ப்புகளைக் குறைக்கின்றது. ஒரு நிமிட சோம்பல் உணாவு நம் பணிகளைச் செய்யத் தேவையான ஊக்கத்தை குறைக்கிறது. அதனால் நமது வாழ்க்கைத்தரம் வெகுவாக பாதிப்புக்கு உள்ளாகிறது.

சோம்பலால் ஏற்படும் பணிக்குவியல் நம்மை குழப்பமான சூழ்நிலைக்கும், நெருக்கடிக்கும் தள்ளுகின்றது. இதனால் மனச்சோர்வும் ஏற்படுகிறது. உயா அதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகி நமது பணிக்கே சிக்கல் ஏற்படுகிறது. இதில் பிறா நலம் சார்ந்த பணிகள் இருப்பின் அவாகள் நலனும் பாதிப்படைகிறது. நமது சோம்பல் பிறா வாழ்வுடன் விளையாடுவதை சமூக அக்கறை உள்ள எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஒவ்வொரு திங்கள்கிழமை காலையும் நம்மில் பலருக்கும் பதற்றத்துடனே தொடங்குவதற்கு காரணம் நமது சோம்பலும், முறையான திட்டமிடல் இல்லாமையுமே ஆகும். நமக்கு அன்றாடம் நிறைய வேலைகள் உள்ளன. அவற்றில் எளிமையான செயல் ஒன்றை முதல்படியில் செய்யத் தொடங்குவதன் மூலம் நமது பணிகளை இலகுவாக்கிக்கொள்ள முடியும்.

ஞாயிற்றுக்கிழமை இரவு, அதிக நேரம் கண்விழிக்காமல் உறங்கச் செல்வது அவசியம். இதனால், காலையில் உடலில் உற்சாகம் பிறக்கும். மனமும் புத்துணாவுடன் இருக்கும். அடுத்து வரும் வேலை நாட்களில் படிப்படியாக நமது பணிகளை தினசரி அடிப்படையில் ஒதுக்கிச் செயல்பட்டால் செயலாற்றுவதில் சிரமம் தெரியாது.

கடினமான பணிகளை துணைப் பணிகளாகப் பிரிப்பதும், துணைப்பணிகளைஒன்றன்பின்ஒன்றாக செய்து முடிப்பதும் நல்லது. இது நம் பணிக்கான காலக்கெடுவின் அழுத்தத்தைக் குறைக்கிறது. ஒரே நாளில் எல்லா வேலையையும் செய்து முடிப்பது சாத்தியமில்லை என்பதை உணாந்து செயல்பட வேண்டும். தினமும் காலையில் எழுந்தவுடன் உடற்பயிற்சி செய்வதன் மூலம் நமது உடலையும், மனதையும் புத்துணாவுடன் மாற்றிக் கொள்ள முடியும். நடைப்பயிற்சி, மிதிவண்டியில் செல்லுதல், நீச்சல், வேக நடை, மாடி ஏறுவதற்குப் படிகளைப் பயன்படுத்துதல் போன்றவை நமது உடலையும், மனதையும் உற்சாகமாக வைத்திருக்க உதவும்.

நுரையீரல்முழுவதும்காற்றைநன்குஉள்ளிழுத்து செய்கின்ற யோகாசனம் நம் மூளைக்குள் இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தி நாம் விரைந்து செயலாற்ற உதவும். நிலுவையில் உள்ள பணியை முடித்தவுடன் நாம் பெறக்கூடிய பலன்களை கற்பனை செய்து பார்ப்பது தொடாந்து நாம் உற்சாகத்துடன் செயல்பட உதவும். மேலும், நமது பணிகளில் ஈடுபடுவதற்குத் தடையாக இருக்கும் சோம்பலை முறியடிக்கவும் உதவும். நமது பணியில் ஏற்படும் கவனச்சிதறல்கள் நமது வேலையை மிகவும் கடினமாக்குகின்றன. பணியிடத்தில் சொந்த பணிகளை செய்வதும், வீட்டில் அலுவலகப் பணிகளை செய்வதும் நமது வாழ்க்கையை மேலும் சிக்கலாகிவிடும்.

வீட்டு உறுப்பினாகளுடன் போதுமான நேரத்தை செலவிட்டால் மட்டுமே அவாகளின் எதிர்பார்ப்புகள் நமக்குத் தெரியவரும்.அவாகளுக்கு தேவை நமது பணம் மட்டுமல்ல, நமது நேரமும்தான். எனவே, நேர மேலாண்மையும் நமக்குத் தேவை.

எப்போதும் மகிழ்ச்சி என்பது நமது தோவுதான். சோம்பலை எதிர்த்துப் போராடுவது நமது பழக்கமாக மாற வேண்டும். சோம்பல் பழக்கமானால், தோல்வி பழக்கமாகும். பெற்ற தோல்விக்கு ஆயிரம் சமாதானங்கள் மனதில் தோன்றும். ஓய்வு என்பது சோம்பலின் நண்பன். தேவையற்ற ஓய்வை நாம் அனுபவிக்கும் போது சோம்பலும் தொடாந்து வரும்.

தூக்கம் ஒரு அருமருந்து. ஆனால், அது அளவினைத் தாண்டக்கூடாது. தூக்கம் கலைந்த பிறகு அதைத் தொடருவது பேராபத்து. உறக்கம் கலைந்த மறுநிமிடம், எழுந்துவிட வேண்டும். எழுந்ததும் முதல் அரை மணியை சோம்பலோடு கழித்தால், அந்த நாள் முழுவதும் உற்சாகம் குறைந்தபடிதான் காணப்படும்.

வெற்றி நம் வாழ்வில் தானாக வந்து ஒட்டிக் கொள்ளாது. நாம்தான் அதனைத் தேடி ஓட வேண்டும். அதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டும். ஆனால் நம்மை உழைக்கவிடாமல் சோம்பல் தடுத்து நிறுத்துகிறது. நாம் சோம்பலாக காலத்தைக் கழித்துக் கொண்டு இருக்கும்போது, யாரோ ஒருவா வாழ்வில் வெற்றி பெறுவதை நம்மால் காண முடிகிறது. நமது நட்பு வட்டம் சுறுசுறுப்பானவாகளுடன் மட்டுமே இருக்க வேண்டும். இன்றே நமது வாழ்வின் இறுதி நாள் என்று கருதி நமது பணிகளைச் செய்ய வேண்டும். இனியாவது சோம்பலைத் தவிர்ப்போம். வாழ்வில் உச்சம்தொட முயல்வோம்.

# தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வட்டியில்லா கடனை மீள வழங்க ஏற்பாடு

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

உயர் கல்வியைத் தொடர்வதற்கு தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வட்டியில்லாத கடன் வழங்கும் நடவடிக்கை தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனை மீள பெற்றுக்கொடுக்க திறைசேரியுடன் விரைவில் கலந்துரையாட நடவடிக்கை எடுப்போம் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகையில் -

நீண்டகாலமாக நிறுத்தப்பட்டிருந்த உயர்தரத்தில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு மேலதிக கல்விக்காக வட்டியில்லா கடன் வழங்கும் திட்டத்தை எதிர்க்கட்சியின் நீண்டகால கோரிக்கைக்கு அமைய மீண்டும் நடைமுறைப்படுத்தியமைக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

என்றாலும் ஹொரிஸன் மற்றும் கட்சு சர்வதேச பல்கலைக்கழக கல்வி நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட சுமார் 1,200 மாணவர்கள் இந்த வட்டியில்லா கடனாக ரூபா 8 லட்சத்தை பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

இந்த வட்டியில்லாக் கடனைப் பெற்ற சில மாணவர்கள் அதனைத் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதைக் கருத்திற் கொண்டு, இந்த மாணவர்களுக்கு அழுத்தங்களை பிரயோகிப்பது நியாயமற்ற செயல். இது தொடர்பில் அரசாங்கம் தலையிடவேண்டும். - என்றார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் -

அரசாங்க பல்கலைக்கழகங்கள் அல்லாத பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை எதிர்பார்த்துள்ள மாணவர்களுக்கு வட்டி இல்லாத கடன் வழங்குவதை அரச வங்கிகள் இடைநிறுத்தி இருந்தன. இந்த திட்டத்தை நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக பதவி வகித்த தற்போதைய ஜனாதிபதியே ஆரம்பித்து வைத்தார். அந்தத் திட்டத்தில் ஆறாவது குழு வரை நாம் தொடர்ந்து அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக அதற்கடுத்த ஏழாவது குழுவுக்கு



அந்த வட்டியற்ற கடனை வழங்குவது தொடர்பில் அரசாங்க வங்கிகள் பின்னடைவைக் காட்டின.

அதனையடுத்து அந்தக் கடனை வழங்கும் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியுடன் நாம் பேச்சு நடத்தி மீண்டும் ஐயாயிரம் ரூபாவாக அந்தக் கடனைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் இதற்கு முன்னர் முதலாவது இரண்டாவது தடவையாக கடன் பெற்றுக் கொண்டவர்கள் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதை தவிர்த்து வந்ததன் காரணமாகவே அந்த வங்கிகள் அதிருப்தியை வெளியிட்டன.

எனினும் அதனை வைத்து அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை நிறுத்த முடியாது. வங்கி ஒன்றில் வாடிக்கையாளர் ஒருவர் இவ்வாறு செயற்பட்டார் என்பதால் அடுத்து வரும் வாடிக்கையாளருக்கு கடன் கொடுப்பதை நிறுத்த முடியாது. அவ்வாறு செய்தால் அது வங்கி சம்பிரதாயத்திற்கும் முரணானதாகவே அமையும்.

எவ்வாறெனினும் தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அதனை பெற்றுக் கொடுக்கும் வகையில் நாம் பேச்சு நடத்தத் தயாராகி வருகின்றோம். அந்த வகையில் கல்வி அமைச்சு, சம்பந்தப்பட்ட வங்கிகள் மற்றும் திறைசேரியுடன் இணைந்து பேச்சு நடத்தி இதற்கு சாதகமான தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளோம். - என்றார். (05)

# உழைப்புக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படாமையினால் பெருந்தோட்டங்களில் 42.3 வீதமானோர் கடனாளிகள்

## எம்.உதயகுமார் சுட்டிக்காட்டு



நாட்டின் மொத்த சனத்தொகையில் 22.3 வீதமானவர்கள் கடனாளியாகி உள்ளனர். அதில் பெருந்தோட்டங்களில் 42.3 வீதமானவர்கள் கடனாளியாகி உள்ளனர். உழைப்புக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படாமையே இதற்கு காரணமாகும் என எம். உதயகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் மந்தபோசணையை இல்லாது செய்வது தொடர்பில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

அதிகாரமோகம் காரணமாக பல்வேறு சதித்திட்டங்கள் மூலம் மக்களை ஏமாற்றி ஆட்சி பீடம் ஏறிய அரசாங்கம் தற்போது நம்பி வாக்களித்த மக்களை நடுத்தெருவில் விட்டுள்ளது.

வாழ்க்கைச்செலவு அதிகரித்து மக்கள் தள்ளாடி வருகின்றனர். மக்கள் தொகை மற்றும் புள்ளிவிவர திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் நாட்டில் 30 லட்சத்து 29 ஆயிரத்து 300 குடும்பங்கள் கடனாளி ஆகியுள்ளன. அதில் 6 லட்சத்தி 97 ஆயிரத்து 300 குடும்பங்கள் தங்களின் அன்றாட உணவுத் தேவையைப்பூர்த்திசெய்வதற்கே கடன் பெற்றுள்ளார்கள். இது பாரதூர மான விடயமாகும்.

அத்துடன் வாங்கிய கடனை மீள செலுத்துவதற்காக 3 லட்சம் குடும்பங்கள் மீண்டும் கடன் பெற்றுள்ளன எனக் குறித்த ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 9 லட்சத்து 70 ஆயிரம் குடும்பங்கள் அடைமான முறையில் கடன் பெற்றுள்ளார்கள். வங்கிகளில் 97 ஆயிரம் குடும்பங்களும் நிதி நிறுவனங்களில் 2 லட்சத்து 72 ஆயிரத்து 500 குடும்பங்களும் பண தரகர்களிடமிருந்து 3 லட்சத்து 3500 குடும்பங்களும் கடன் பெற்றுள்ளன எனக் கூறப்படுகிறது. அத்துடன் நாட்டின் மொத்த சனத்தொகையில் 22.3 வீதமானவர்கள் கடனாளியாகி உள்ளனர். அதில் நகர்புறங்களில் சுமார் 24.3 சதவீதமானவர்கள் கடனாளியாகி உள்ள நிலையில் பெருந்தோட்டங்களில் அது 42.3 வீதமானவர்கள் கடனாளியாகி உள்ளனர். பெருந்தோஜூட்டங்களில் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லாமையே இதற்குக் காரணமாகும். அத்துடன் கடனாளியாகி உள்ளது மாத்திரமல்லாது பெருந்தோட்டங்களில் மந்த போசணை, வறுமை, போாக்கின்மை என்பன அதிகரித்து காணப்படுகின்றன. நாட்டுக்காக உழைத்த மலையக பெருந்தோட்ட மக்கள் இன்று கடனாளியாக மாறியுள்ளார்கள். - என்றார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பொருளாதாரப் படுகொலையாளிகள் சுதந்திரமாக வாழ பொறுப்புக்கூறத் தேவையில்லாத மக்களுக்கு தண்டனை

## கபீர் ஹாசீம் காட்டம்



பொருளாதாரப் படுகொலையாளிகள் சுதந்திரமாகவும் உல்லாசமாகவும் வாழும் நிலையில் பொருளாதாரப் பாதிப்புக்கு பொறுப்புக் கூற தேவையில்லாத நாட்டு மக்கள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு அமைய செயற்படுவதாக இருந்தால் அரசாங்கம் என்பதொன்று தேவையில்லை.

நிதியமைச்சை நாணய நிதியத்துக்கு பொறுப்பாக்கலாம். நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்துவதில் மஹிந்த ராஜபக்ஷ சிறந்த நடிகர். வற் வரி விதிப்பின் பெறுபேறு மக்கள் போராட்டத்தை தீவிரப்படுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது வாழ்க்கை செலவு அதிகரிப்பு மற்றும் மந்த போசணை பாதிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர்மேலும்உரையாற்றியவை வரு மாறு -

பொருளாதார முகாமைத்துவத்தில் அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானங்களால் நாடுவங்குரோத்துநிலையடைந்தது என்பதை உயர்நீதிமன்றம் பகிரங்கப்படுத்தியுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பின் சுமையை ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது பொறுப்பாக்கிய அரசாங்கம் தற்போது வற் வரியை அதிகரித்து ஒட்டுமொத்த மக்களையும் பல இன்னல்களுக்கு உள்ளாக்கியுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பின் விளைவால் நிர்மாண கட்டுமானத்துறை, சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிற்றுறை,தகவல் தொழில்நுட்பம் உட்பட சேவைத்துறைகள் என்பன சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளன.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் வசதி படைத்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்ற நிலையில் வசதியில்லாதோர் பட்டினியால் போராட்டத்தில் ஈடுபட நேர்ந்தது. தமது பிள்ளைகளின் பசியை போக்குவதற்காக பெரும்பாலான பெற்றோர் பட்டினியில் வாடுகிறார்கள்.

இளைஞர் யுவதிகள் தொழிலின்மையால் விரக்தியில் உள்ளார்கள். மறுபுறம் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் 'பராட்டே' சட்டத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். வற் வரி அதிகரிப்பைத் தொடர்ந்து அத்தியாவசிய உணவு பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வடைந்துள்ளது.

இதனால் கல்வித்துறை பாதிக்கப்படுவதுடன்,மந்த போசணை வீதமும் உயர்வடையும் இதனைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1989 ஆம் ஆண்டு கொழும்பு கோட்டையில்பாரியபோராட்டம்இடம்பெற்றது. ஜனநாயகத்துடன் வாழ்க்கை செலவு அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் அன்று போராட்டத்தில்ஈடுபட்டார்கள்.பிரான்ஸ்புரட்சியும் வாழ்க்கை செலவு உயர்வு,பணவீக்கம் உயர்வு என்பனவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து தோற்றம் பெற்றது.ஆகவே நாட்டு மக்கள் வெகுவிரைவில் வாழ்க்கை செலவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதிக்கு இறங்குவார்கள்.

கோட்டாபய ராஜபக்ச பொருளாதார ரீதியில் எடுத்த தவறான,மூர்க்கத்தனமான தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது.பொருளாதார படுகொலையாளிகள் யார் என்பதை உயர்நீதிமன்றம் தெளிவாக அறிவித்துள்ளது.அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

பொருளாதாரப் படுகொலையாளிகள் சுதந்திரமாகவும்,உல்லாசமாகவும்வாழுகின்ற நிலையில் பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற தேவையில்லாத மக்கள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரிகளை அமுல்படுத்துமாறு குறிப்பிடவில்லை.வரி திருத்தம் என்று குறிப்பிட்டுக்கொண்டு நேர் மற்றும் நேரில் வரி தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளன.

நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படுவதாக இருந்தால் அரசாங்கம் என்பதொன்று தேவையில்லை. நிதியமைச்சை நாணய நிதியத்துக்கு பொறுப்பாக்கலாம்.சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை அடிப்படையாக கொண்டு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும். மொத்த தேசிய உற்பத்தியை 12 சதவீதமாக அதிகரித்துக் கொண்டு அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ளுமாறு நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரிகளை அமுல்படுத்தாமல் செல்வந்த தரப்பினரிடமிருந்து வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும்,செல்வந்த வரி,கொடை வரி என்பனவற்றை அறிமுகப்படுத்துமாறும் நாணய நிதியம் குறிப்பிட்டது. ஆனால் அரசாங்கம் அதனை செயற்படுத்தாமல் வற் வரியை அதிகரித்து ஒட்டுமொத்த மக்களையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

2021 ஆம் ஆண்டு இறுதி காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடியின் போது 1.9 ரில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைமுறிகளை அரசாங்கம் விநியோகித்தது.இதனை நிதி நிறுவனங்கள் பல பெற்றுக்கொண்டன.இதற்கு அரசாங்கம் 27 சதவீதவரிசெலுத்தியது. கடன்மறுசீரமைப்பின் போது இந்த நிறுவனங்களிடமிருந்து வரி அறவிட எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 500 குடும்பங்கள் மாத்திரமே வரி சலுகை வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களை திசைத்திருப்பும் சிறந்த நடிகர் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

நாட்டு மக்களை அதளபாதாளத்துக்கு தள்ளும் வற் வரியை அதிகரிக்கும் பிரேரணைக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில்வாக்களித்துவிட்டுஇருதினங்களுக்கு பின்னர் வரி அதிகரிப்புக்கு நாங்கள் எதிர்ப்பு என்று அறிக்கை வெளியிடுகிறார். மஹிந்த ராஜபக்ச உட்பட பொதுஜன பெரமுனவினர் எந்தத் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதை அறிய முடியவில்லை.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் எந்த வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வரி விலக்கு மற்றும் விசேட சலுகை வழங்க கூடாது என்று சர்வதேச நாணய நிதியம் தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை கவனத்திற் கொள்ளாமல் சீன நிறுவனத்துக்கு வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் கொழும்பில் முன்னெடுக்கப் படவுள்ள முதலீட்டுக்காக சீன நிறுவனத்துக்கு 15 வருட காலத்துக்கு வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளதுடன்,அதன் சேவையாளர்களுக்கும் வரி சலுகை வழங்கப்பட்டுள்ளது.இதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே இந்த வரி விலக்குக்கு மஹிந்த ராஜபக்ச உட்பட பொதுஜன பெரமுனவினர் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். - என்றார். (05)



## 20 லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கடந்தகாலத்துடன் ஒப்பிடும்போது தற்போது சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்றுள்ளது. சுமார் மூன்று வருடங்களாக பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்த சுற்றுலாத்துறை இன்று ஓரளவு ஸ்திரமான நிலைக்கு வந்துள்ளது. 2023 டிசெம்பர் இறுதியில் 106 சதவீதம் சுற்றுலாத்துறையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

இவ்வருடம் மேலும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் இன்னும் அதிகமாக சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டுக்கு வரவழைக்கவும் அவசியமான பணிகளை நாம் தற்போது மேற்கொண்டு வருகின்றோம். 2023ஆம் ஆண்டில் 15 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டுக்கு வரவழைப்பதே எமது இலக்காக இருந்தது. நாம் அந்த இலக்கை ஓரளவுக்கு அடைந்துகொண்டோம் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும். இவ்வருடம் எமது இலக்கு குறைந்தது இரண்டு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டுக்கு அழைத்து வருவதாகும். அதன் ஊடாக 06 பில்லியன் டொலர் வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது விதிக்கப்பட்டுள்ள வற் வரி காரணமாக, சுற்றுலாத் தளங்களின் பிரவேசப் பத்திரங்களுக்கான கட்டணங்கள் அதிகரித்திருக்கின்றமை தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். வற் வரி எவ்வளவு தூரம் எமது சுற்றுலாத் துறையில் தாக்கம் செலுத்தியுள்ளது என்பது குறித்தும் சுற்றுலாத் துறைக்கு இந்த வற் வரி தொடர்பில் நிவாரணம் வழங்குவது தொடர்பிலும் சுற்றுலாத் துறை அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் தொடர்ந்தும் கலந்துரையாடுகின்றார். அந்தப் பணிகள் வெற்றியடையும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை தற்போது ஆரம்பித்துள்ளதுடன் அவற்றை இவ்வருட இறுதியில் நிறைவு செய்யவும் எதிர்பார்த்துள்ளோம். உதாரணமாக எல்ல, பண்டாரவளை, நீர்வீழ்ச்சிகள் மற்றும் இராவணன் நீர்வீழ்ச்சிக்கு செல்லும் நடைபாதை போன்ற பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்துள்ளோம். அதேபொன்று தென்பகுதி உட்பட நாட்டில் உள்ள சுற்றுலாத் தளங்களை சுற்றுலா வலயங்களாக அபிவிருத்தி செய்யவும் திட்டமிட்டுள்ளோம்.

இந்நாட்டுக்கு டொலர் கொண்டு வரும் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி உட்பட அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. எதிர்காலத்திலும் அவ்வாறே அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். எமது பணிகள் வெற்றியடையும் என்று நாம் எதிர்ப்பார்க்கின்றோம் என்றார்.

## 2023இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவாக பதிவாகியுள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பெறப்பட்ட வரி வருமானம் 861.2 பில்லியன் ரூபாவாகும். அதேநேரம், வருமான வரி இலகத்தினைப் பெறுவதற்கு பொதுமக்கள் ஆர்வம் காண்பிக்கின்றார்கள்.

விசேடமாக, வருமான வரி இலக்கத்தினைக் கொண்டிருக்காதவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். இருப்பினும் அனைவரும் பாதிக்கப்படாது வரிவருமானத்தினைச் செலுத்துவது பொருத்தமானதாகும் என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனநாயக குரல்களை காவல்துறை கரம்கொண்டு ஒடுக்க வேண்டாம்

## குரலற்லவர்களின் குரல் கோரிக்கை

ஜனநாயககுரல்களைகாவல்துறைகரம்கொண்டு ஒடுக்க வேண்டாம் எனக் குரலற்லவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்தவாரம் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க வடக்கு மாகாணத்திற்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அதன் ஒருகட்டமாக, 05 ஆம்திகதி அன்று வவுனியாவில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டார்.

அதன்போது, வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஜனாதிபதியை நேரில் சந்தித்து, 'ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமல் செய்யப்பட்ட தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்தது?' என்பதற்கான பதிலை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுப்பதற்காக அங்கு சென்றிருந்தனர். எனினும், அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அவர்கள், காவல் துறையினரால் வழிமறிக்கப்பட்டார்கள். அதன்போது, ஜனநாயக நாட்டில் தமக்கு மறுக்கப்பட்ட அடிப்படை உரிமையை ஆட்சேபித்து, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அவ்விடத்தில் நின்றவாறு அஹிம்சை வழியில் தமது எதிர்ப்பை பதிவுசெய்ய முட்பட்டிருந்தனர்.

அச்சந்தர்ப்பத்தில், கவனவீர்ப்பில் ஈடுபட்ட தாய்மாரை சினங்கொள்ளச்செய்து, அங்கு வலிந்ததொரு அமைதியின்மையை தோற்றுவித்த காவல்துறையினர், கைகளில் ஒப்படைத்த தம் உறவுகளுக்கு நீதி கேட்டு தெருப்போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களை மனிதநேயமற்ற முறையில் பலவந்தமாக அடக்கி ஒடுக்கி பஸ்ஸ•க்குள் இழுத்துச் சென்று அடாவடியாக கைதுசெய்துள்ளனர்.

இது மிக மோசமானதொரு உரிமை மறுப்பாகும். இதுபோன்ற ஜனநாயக விரோதங்கள், நாட்டினுடைய எதிர்கால முன்னேற்றத்திற்கு குந்தகத்தை ஏற்படுத்தவல்லன. ஜனநாயகப் பெயர் பொறிக்கப்பட்ட இலங்கை தேசத்தினுடைய ஆளுகைத்தரப்பின் ஒற்றை வாக்குறுதிக்கு மதிப்பளித்து, தமது உற்றச் சொந்தங்களை உயிர்ப்புடன் கையளித்த உறவுகள், தம் அன்பிற்குரியவர்களை மீளத்தருமாறு, அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது எனக்கேட்டு 14 ஆண்டுகாலமாக தொடர் போராட்டங்களை நடாத்தி வருகிறார்கள்.

அந்தப் போராட்டங்களில் பங்கெடுத்த வயோதிபப் பெற்றோர்களில் பலர் உடல் உளரீதியில் பாதிக்கப்பட்டு உயிர்நீத்துள்ளார்களே தவிர, இவர்களுக்கு இதுவரை நீதிகிட்டவில்லை. இதுபோன்று, போரின் பெயரில் படுகாயப்படுத்தப்பட்ட பல்வேறு மனக்காயங்களுக்கு மருந்திட வேண்டிய ஆட்சியாளர்கள், அதனைச் செய்ய முயற்சிக்காது மேன்மேலும் காயங்களை ஏற்படுத்திக்கொண்டு உதட்டளவில் நல்லிணக்கம் பற்றிப் பேசுவது முரண்நகையானது. பாதிக்கப்பட்ட குடிமக்களது நீதி நியாயத்திற்கான குரல்களை, காவல்துறை கரம்கொண்டு அடக்கி தீர்வினைக் காண்பதனூடாக நாட்டை மீண்டும் அழிவுக்கே இட்டுச்செல்வதாக அமையும்.

எனவே, நீதிகோரி குரலுயர்த்திய, வவுனியா வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி திருமதி சி.ஜெனிற்றா காவல் துறையால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவரை உடனடியாக விடுவிக்க சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பினராகிய நாம் மனிதநேய சிவில் அமைப்பென்ற வகையில் வலியுறுத்த கடமைப்படுகிறோம்.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து கருத்துச் சுதந்திரத்திற்கு செவிசாய்த்து ஜனநாயக பண்புடைய உணர்வு வெளிப்பாடுகளுக்கான தடைகளை அகற்றி, நடந்து முடிந்த யுத்தத்திற்கான காரண காரியங்களைக் கண்டடைந்து அவற்றுக்கு தாமதமற்ற தீர்வைக் காண்பதன் மூலமே நாட்டில், உண்மையான நல்லிணக்கத்தை உறுதிசெய்யமுடியும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகிறோம். – என்றுள்ளது. (05)

# மத்திய வங்கி ஆளுநர் மீது எமக்கு நம்பிக்கையில்லை

## லக்ஸ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு



நாட்டின் நிதி நிலைமை குறித்து மத்திய வங்கியின் ஆளுநர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை. உண்மையை மூடி மறைத்தார்.

ஆகவே மத்திய வங்கி ஆளுநர் மீது எமக்கு நம்பிக்கையில்லை என எதிர்க்கட்சிகளின் பிரதமகொறடாவான லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்தன, நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உண்டு என ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் குறித்து நாடாளுமன்ற விவாதம் நடத்த வேண்டும். – என்றார்.

இதனை தொடர்ந்து எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல, நாடாளுமன்றத்திற்கே நிதி அதிகாரம் உள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் கூறியுள்ளார் என அமைச்சர் பந்துல குணவர்தன கூறுகின்றார்.

ஆனால் நாடு வங்குரோத்தடைந்துள்ளது என்று மத்திய வங்கி ஆளுநர் ஒருபோதும் இந்த நாடாளுமன்றத்திற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. நாட்டின் நிதி நிலைமையின் உண்மையை அவர் மூடி மறைத்தார்.

நிதி நிலைமை தொடர்பில் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

அப்போது கையிருப்பு எவ்வளவு இருக்கின்றது என்று கேட்டேன். 20 மில்லியன் டொலர்கள் இருப்பதாகக் கூறினார். அப்போதே நாடு வங்குரோத்தடைந்துள்ளது என்பதை அறிந்துகொண்டோம். எனவே அவ்வாறான மத்திய வங்கி ஆளுநர் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. – என்றார். (05)

# மன்னார் நகர சபை எல்லைக்குள் தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

## சபையின் கழிவகற்றல் முகாமைத்துவம் மீது குற்றச்சாட்டு



மன்னார் நகர சபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுகளை முறையற்ற விதமாக சாந்திபுரம் காட்டுப்பகுதிக்குள் கொட்டுவதால் டெங்கு நோய் உட்பட பல்வேறு தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சாந்திபுரம் கிராம மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் நகரசபை முன்னதாக பாப்பா மோட்டை பகுதியில் உள்ள திண்ம கழிவகற்றல் நிலையத்தில் ஒழுங்கான முறையில் குப்பைகளை தரம் பிரித்து களஞ்சியப்படுத்தாமையால் கொழும்பை சேர்ந்த அரசார்பற்ற நிறுவனம் ஒன்று வழக்கு தொடர்ந்து குறித்த பகுதியில் திண்ம கழிவுகளை சேகரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் மன்னார் நகரசபைக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் இந்தத் தீர்ப்பை காரணம் காட்டி மன்னார் நகரசபை நீண்ட நாள்களாக மன்னார் நகர பகுதியில் கழிவகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் நகரமே சுகாதார சீர்கேடுகளுக்கு உள்ளாகியிருந்தது.

இந்த நிலையில் ஏற்கனவே சாந்திபுரம் பகுதியில் மிருகங்களின் உடல் பாகங்கள், மருத்துவ கழிவுகள் உட்பட முறையற்ற விதமாக குப்பைகள் கொட்டப்பட்ட நிலையில் மக்களின் எதிர்ப்பை அடுத்து குறித்த செயற்பாடு நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் மக்களின் எதிர்ப்பை மீறி மீண்டும் நகர சபை திண்ம கழிவுகளை அனுமதியின்றி தரம் பிரிக்காது சாந்திபுர காட்டுபகுதிக்குள் கொட்டுவதாக சாந்திபுரம் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறிப்பாக உக்காத குப்பைகளையும் இலத்திரனியல் கழிவுகளையும் நீர் நிலைகளுக்குள்ளும் பள்ளங்களுக்குள்ளும் நகரசபை கொட்டி நிரப்பி வருகின்றது.

இவ்வாறான நிலையில் சாந்திபுரம் பகுதியில் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புஏற்பட்டுள்ளமையால் உடனடியாக நகரசபை குப்பை கொட்டும் செயற்பாட்டை நிறுத்துமாறும் கொட்டிய குப்பைகளை உரிய விதமாக அகற்றுமாறும் இல்லாவிட்டால் மக்களை திரட்டி நகர சபைக்கு முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாகவும் சாந்திபுரம் மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (05)

# 13 கோடி ரூபா பெறுமதியான உயர் ரக சிகரெட்டுகள் சிக்கின



வெளிநாடுகளில் இருந்து வந்த கொள்கலன்கள் மற்றும் சரக்குப் பொதிகளில் இருந்து சுமார் 13 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதிமிக்க வெளிநாட்டு உயர் ரக சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு சொந்தமான சரக்குப் பொருள் ஏற்றி இறக்கும் முனையத்துக்கு வந்திருந்த சந்தேகத்திற்கிடமான சரக்குப் பொதிகளில் இருந்து 18 லட்சம் உயர் ரக சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை சுமார் 4 கோடி 54 லட்சம் ரூபா என சுங்கப் பிரிவினரால் மதிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சரக்குப் பொதிகள் டுபாயில் இருந்து விமான தபால் சேவை மூலம் நாட்டை வந்தடைந்துள்ளதோடு, சந்தேகத்திற்கிடமான சரக்குப் பொதிகள் ஆஸ்திரேலியாவிற்கு கொண்டு செல்லப்பட இருந்தன எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை கம்போடியாவில் இருந்து லெபனானுக்கு கொள்கலன்களை ஏற்றிச்சென்ற சரக்கு கப்பல் இலங்கையை வந்தடைந்திருந்த நிலையில் சுங்க வருவாய் கணக்காய்வுப் பிரிவினரால் குறித்த கொள்கலன்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது 39 லட்சம் 97 ஆயிரம் 600 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சந்தைப் பெறுமதி 9 கோடி 94 லட்சத்து 38 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# வரிச்சலுகை வழங்குவதில் எந்தப் பாரபட்சம் இல்லை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

ஒரு தரப்பினருக்கு மாத்திரம் பணம் கிடைக்கும் வகையில் வரிச்சலுகை கொடுக்க தயாராக இல்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'பணத்தை தங்கள் பொக்கெட்டுகளில் போடுவதற்காக வரி விலக்கு அளிக்கும் திட்டத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இரத்தினக்கல் தொழிற்துறையை பாரியளவில் முன்னேற்ற வேண்டும் என்பதே எனது நோக்கம்.

ஏனைய நாடுகளிடம் எப்போதும் உதவி கேட்க முடியாது. நமக்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்ட வேண்டும். அதற்கு நாட்டின் பொருளாதாரம் தயார் படுத்தப்பட வேண்டும். வாக்குறுதிகளை அளித்து இவற்றைச் செய்ய முடியாது.

அந்நியச் செலாவணியை ஈட்டும் புதிய பொருளாதாரம் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். அது ஏற்றுமதி பொருளாதாரமாக இருக்க வேண்டும். மேலும், சுற்றுலாத்துறை மூலம் வருமானம் ஈட்ட வாய்ப்பு உள்ளது.



நாம் ஒரு நாடாக முன்னேறுவதாக இருந்தால், நமது முயற்சியின் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்ட வேண்டும்.

யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் சொல்ல முடியும். ஆனால் பெறுபேறுகள் கிடைக்க வேண்டும்.

நாம் அனைவரும் நாட்டின் உண்மையான நிலைமையை புரிந்து கொண்டு முன்னேறினால் 02 வருடங்களின் பின்னர் இந்நிலையிலிருந்து விடுபட முடியும். - என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# 24 குடியிருப்பாளர்களுக்கு டெங்கு சிவப்பு எச்சரிக்கை

## சாவகச்சேரியில் அதிரடி

யாழ்ப்பாணம் - சாவகச்சேரியில் டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழல் காணப்பட்ட 24 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் நுணாவில் பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது 129 இடங்கள் டெங்கு பரவுவதற்கு ஏதுவான இடங்களாக இனம் காணப்பட்ட நிலையில், 24 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு துப்புரவு செய்தவற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (05)

# சபரிமலை யாத்திரைக்கு சென்ற யாழ். பக்தர் விமானத்தில் சாவு

இந்தியாவின் சபரிமலை யாத்திரையில் பங்கேற்பதற்காக விமானத்தில் சென்று கொண்டிருந்த பக்தர் ஒருவர் வயாழக்கிழமை விமானத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னை செல்லும் விமானத்தில் செல்லும் போது மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதையடுத்து ,விமான ஊழியர்கள் அவருக்குத் தேவையான முதலுதவி அளித்து சென்னை விமான நிலையத்துக்குத் தகவல் தெரிவித்தனர்.

ஆனால், சம்பந்தப்பட்ட மருத்துவக் குழுவினர் விமான நிலையத்துக்கு வந்தபோது அவர் ஏற்கெனவே இறந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலத்தை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யுமாறு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய பிரதி உயர்ஸ்தானிகரிடம் உயிரிழந்தவரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (05)



# நாடாளுமன்ற உறுப்பினராக நயன வாசலதிலக பதவிஏற்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக நயன வாசலதிலக வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்றம் கூடியபோது நாடாளுமன்ற உறுப்பினராக நயன வாசலதிலக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து சமிந்த விஜேசிறி விலகியிருந்தார்.

இதனை அடுத்து ஏற்பட்ட நாடாளுமன்ற வெற்றிடத்திற்கு நயன வாசலதிலகவை நியமனம் செய்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வியாழக்கிழமை வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# முறிகண்டியில் கோர விபத்து

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்து வியாழக்கிழமை முறிகண்டி பொலிஸ் காவலரணுக்கு அண்மித்து ஏ9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

அதன்படி பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த அரச பஸ் பயணிகளை ஏற்றுவதற்காக பஸ் தரிப்பிடத்தில் தரித்துள்ளது .அதேசமயம் அதே திசையில் பயணித்த ரிப்பர் வாகனம் பஸ்ஸின் பின்னால் மோதியதால் இந்த விபத்து ஏற்ட்டுள்ளது.

சம்பவத்தில் காயங்களுக்குள்ளான பயணிகள் மூவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன் விபத்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த கிளிநொச்சி பொலிசார் சீர் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# கொழும்பில் படுகொலை: சந்தேகநபர் தப்பியோட்டம்

கொழும்பு வாழைத்தோட்டம் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலை வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பு 12, ஆயவளை வீதியில் வசிக்கும் 48 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

## 1 லட்சத்து 78...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெருகல்-மாவடிச்சேனை பகுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதோடு, குறித்த பகுதியிலுள்ள சுமார் 100 ஏக்கர் வயல்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

வெள்ளளத்தினால் பொலன்னறுவை வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த மட்டக்களப்பு மாவட்டத்திற்கான தொடருந்து சேவைகள் நேற்று பிற்பகல் முதல் வழமைக்குத் திரும்புவதாக தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கமைய, நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு புலதிசி நகர்சேர் தொடருந்து, கொழும்பு கோட்டையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்தது.

அதேவேளை, சேனாநாயக்க சமுத்திரம் வான்பாய்வதினால் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகள் தொடர்ந்தும் நீரில் மூழ்கியுள்ளதோடு சேனாநாயக்க சமுத்திரத்தில் இருந்து விநாடிக்கு 11,000 கன அடி நீர் விடுவிக்கப்பட்டு வருகின்றது. இதனால் கல்லோயாவின் இருமருங்கிலும் வசிக்கும் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டுமென நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, பொலன்னறுவை - மட்டக்களப்பு வீதியில், கல்லேல்ல பகுதியூடாக கனரக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நேற்று காலை வெள்ள நிலைமையை ஆராய்ந்த பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொலன்னறுவை மாவட்ட பேரிடர் முகாமைத்துவ பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, மண்சரிவு காரணமாக பதுளை - கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து, ஹாலிஎல - உடுவர பிரதேசத்தின் ஏழாம் கட்டையில் தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது. குறித்த வீதியில் தொடர்ந்தும் மண்சரிவு அபாயம் காணப்படுவதுடன், வீதியில் வெடிப்புகள் காணப்படுவதாகவும் பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பிபிலை - லுணுகலை வீதியையும் சில கட்டுப்பாடுகளுடனேயே பயன்படுத்த முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளதோடு பசறை - மடுல்சீம வீதியும் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதுடன், அதற்கான மாற்றுவீதி உருவாக்கப்பட்டு வருவதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம், வெஹெரகல நீர்த்தேக்கத்திலிருந்து விடுவிக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளமையினால், மாணிக்க கங்கையை அண்மித்து காணப்பட்ட வெள்ள நிலைமை படிப்படியாக குறைவடைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## புதிய எம்.பியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதித் துவப்படுத்திய பதுளை தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி அவர்களின் இராஜினாமாவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு வாசலதிலக இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

பண்டாரவளை, புனித தோமஸ் கல்லூரியில் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த அவர் சமையல்கலை தொடர்பில் பட்டப்படிப்பையும், வர்த்தக முகாமைத்துவம் தொடர்பில் சுவிட்சர்லாந்தில் பட்டப்படிப்பையும் நிறைவு செய்துள்ளார்.

அத்துடன், சமையல் கலைஞராக பல வருடங்கள் அனுபவம் கொண்ட அவர் ஆஸ்திரேலியாவில் முன்னிலை ஹோட்டல் ஒன்றிலும் இலங்கையில் முன்னிலை ஹோட்டல் ஒன்றிலும் சேவையாற்றியுள்ளார். நயன வாசலதிலக தற்பொழுது உள்நாட்டு மற்றயும் வெளிநாட்டு பல வர்த்தகங்களின் உரிமையாளராவார்.

2015இல் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசியலுக்குப் பிரவேசித்த இவர் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பதுளை தேர்தல் மாவட்டத்தில் 31,307 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

2001இல் இஷானி கெஹெல்பன்னலவை மணம்முடித்த நயன வாசலத்திலக ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

## வியாபாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் உள்ள பெரிய சந்தைகளில் ஒனன்றான திருநெல்வேலியில் நீண்டகாலமாக சிறு பொருட்களை வியாபாரம் செய்து வரும் வியாபாரிகளுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் நல்லூர் பிரதேச சபையினால் சந்தைக்குள் புதிய இடங்கள் ஒதுக்கப்பட்டன.

முன்னர் பிரதான வாயிலுக்கு அருகில், சந்தைக்குள் நுழைந்ததும் காணப்படும் இடத்தில் அவர்கள் வியாபாரம் செய்துவந்தனர். அந்த வேளையில் , சந்தைக்கு வந்து செல்வோர் அவர்களிடம் பொருட்களை வாங்கிச் செல்ல இலகுவாக இருந்தது.

அவர்கள் முன்னர் வியாபாரம் செய்த இடங்கள் தற்போது வாகன தரிப்பிடமாக பிரதேச சபையால் மாற்றப்பட்டுள்ளது. சந்தையில் இருந்து பொருட்களை ஏற்றி இறக்கும் வாகன தரிப்பிடமாகவும் அது பயன்படுத்தப்படுகின்றது.

அந்த பகுதியில் வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு சந்தைக்குள் பிறிதொரு இடம் பிரதேச சபை ஒதுக்கிக் கொடுத்துள்ளது.

புதிதாக ஒதுக்கி கொடுக்கப்பட்ட இடமானது , சந்தையின் ஒதுக்குப்புறமான பகுதி என்று வியாபாரிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர், அங்கு தமக்கு வியாபாரம் நடைபெறவில்லை. என்றும் இட வாடகையாக முன்னர் நாளொன்றுக்கு 80 ரூபாய் வாங்கிய பிரதேச சபை தற்போது 150 ரூபாய் வாங்குகின்றார்கள் என்றும் அவர்கள் முறையிடுகின்றனர். மின்சார வசதிகள்கூடத் தமது கடைகளுக்குச் செய்து தரவில்லை என்றும் குறைப்பட்ட அவர்கள் எமது வியாபர நடவடிக்கைக்காக சந்தைக்குள் நல்லதொரு இடத்தினை ஒதுக்கி தர பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern



ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

DOWNLOAD PASSENGER APP

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

**விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?**

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 0706563213

JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

காலைக்கதிர் Kalaikkathir

# பிரித்தானிய இளவரசி யாழ் வருகை வடக்கு மாகாண ஆளுநர் வரவேற்பு







இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்துள்ள பிரித்தானிய இளவரசி ஆன் மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் உள்ளிட்ட குழுவினர் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

இலங்கைவிமானப்படைக்குச்சொந்தமான விசேட உலங்கு வானூர்தி மூலம் வருகை தந்த இளவரசி, யாழ்ப்பாணம் நாவாந்துறை பொது மைதானத்தில் தரையிறங்கிய போது, வடக்கு மாகாண ஆளுநரான பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களுக்கு வரவேற்பு அளித்தார்.

இதன்போது பிரித்தானிய இளவரசி ஆன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு இடையில் சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான இராஜ்ஜிய உறவுகளின் 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதனைச் சிறப்பிக்கும் வகையில் பிரித்தானிய அரச குடும்பத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய ரோயல் இளவரசி மற்றும் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் மூன்று நாள்கள் பயணமாக இலங்கை வந்துள்ளனர்.

வியாழக்கிழமை மதியம் யாழ்ப்பாணத் திற்கு வந்த அதிதிகள் யாழ்ப்பாண நூலகத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிய இளவரசி நேற்று வியாழக்கிழமை கண்டியிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகைக்கும் சென்று வழிபட்டார். (05)

# புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் கட்டாக்காலிகளால் கடும்சிரமம்





முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் பிரதேச சபையை அலுவலகத்தை அண்மித்த பகுதியில் மிக அதிக அளவிலான கட்டாக்காலி கால் நடைகள் இரவு வேளைகளில் வீதியில் உறங்குவதால் வீதியில் செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் எனக் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே குறித்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தி இந்த கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீதிகளில் உறங்கும் கட்டாக்காலி கால்நடைகளால் தொடர்ச்சியாக விபத்துக்கள் ஏற்பட்டு பலருடைய உடைமைகள் மற்றும் அங்கங்களும் சேதமடைந்துஇருக்கின்றநிலைமையில் இது தொடர்பில் அதிகாரிகளும் அக்கறையற்று இருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இந்த கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த புதுக் குடியிருப்பு பிரதேச சபையினர் மிக விரைவில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)


# இணைய வழி பண மோசடிக்கு எதிராக வருகிறது புதிய சட்டம்

## அமைச்சர் செஹான் தகவல்

இணையவழி கடன் மோசடிகளுக்கு எதிராக புதிய அதிகாரங்களுடன் கூடிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஹெஹான் சேமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை நிகர நிதி மற்றும் கடன் ஒழுங்குமுறை சட்டமூலம் எதிர்வரும் காலங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும், ஆனால் இணையவழி கடன் கடத்தல் போன்ற விடயங்களை சட்டமூலத்தில் முழுமையாக உள்ளடக்க முடியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இணையவழி கடன் பறிமுதல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.



இது ஒரு பாரிய ஆபத்தான நிலை என்பதை அரசாங்கம் அங்கீகரித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஹெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார். (05)

# சிசிடிவி கமராக்கள் பொருத்தும் நடவடிக்கைகள் பஸ்களிலும்

## கீதா குமாரசிங்க தெரிவிப்பு

வன்முறை மற்றும் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் வகையில் அனைத்து பஸ்களிலும் சிசிடிவி கமராக்கள் பொருத்தப்பட உள்ளதாக இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையின் பெருமளவான மாணவர்கள் போசாக்கு குறைப்பாட்டிற்கு ஆளாகியுள்ள நிலையில் புரோட்டின் நிறைந்த போசாக்கான உணவை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு வழங்க எதிர்பார்க்கின்றோம்.

அதேபோல் பெண்கள் வெளிநாடு செல்லும் போது 05 வயதுக்கு குறைவான குழந்தைகளிருக்கும் எத்தனை தாய்மார் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்பது தொடர்பிலான தகவல்களை பிரதேச செயலக மட்டத்தில் தேடி அறியவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (05)



# பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபித்த பின் முதலீடுகளில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வு

## வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் உறுதி

பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபித்ததன் பின்னர் முதலீடுகளை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல்களுக்கான தீர்வுகள் எட்டப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இருவருக்கிடையிலான சந்திப்பு புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே ஆளுநர் இதனை தெரிவித்தார்.

மேலும் கலந்துரையாடும்போது - கனடாவிலிருந்து வருகைதரும் பலர் வடக்கில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வம் காட்டுகின்றமை தொடர்பில் ஆளுநர் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்ததுடன் நாட்டில் பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபித்ததன் பின்னர் முதலீடுகளை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல்களுக்கான தீர்வுகள் எட்டப்படும். அத்துடன் வடக்கில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள பசுமை சக்திவள திட்டங்கள், பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# போதைப்பொருள் கடத்தல்காரரான 'ராஜ் குமார்' உட்பட சிலர் கைது

வடகொழும்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையில் போதைப்பொருள் கடத்தல்காரரான ' ராஜ்குமார்' உட்பட மேலும் சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யுக்திய நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையில் 50 பொலிஸ் உத்தியோகத்தர்கள் , 50 இராணுவ அதிகாரிகள் , 100 கடற்படையினர் மற்றும் 100 பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் பொலிஸ் மோப்ப நாயுடன் ஈடுபட்டனர்.

இதன்போது 6 ஹெரோயின் போதைப்பொருள் வழக்குகள் , ஒரு ஹெரோயின் போதைப்பொருள் உயர் நீதிமன்ற வழக்கு , 4 ஐஸ் போதைப்பொருள் வழக்குகள், ஒரு கஞ்சா போதைப்பொருள் வழக்கு மற்றும் ஒரு சட்டவிரோத கோடா வழக்கு ஆகியவை தொடர்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# ஈழத் தமிழர்களுக்கு இந்தியா மீண்டும் ஆயுதங்களை வழங்கி உதவவேண்டும்



## சாணக்கியன் கோரிக்கை

விடுதலைப் போராட்டத்திற்கு முன்னர் ஈழத்தமிழர்களுக்கு ஆயுதங்களைவழங்கிய இந்தியா தற்போதைய சூழ்நிலையில் பொருளாதார மீள்கட்டமைப்பிற்கான ஆயுதங்களையும் தமிழர் தாயகத்திற்கு வழங்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை வர்த்தக மையத்தில் இடம்பெற்ற அயலக தமிழர் தின விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைக்காக தொடர்ந்து போராடிவரும் தாம், தமிழக முதல்வரிடமும் அரசியல் பிரமுகர்களிடமும் மேற்படி கோரிக்கைகளை முன்வைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியா மற்றும் தமிழகத்தின் சிறந்த ஆயுதமான பொருளாதரத்தை வைத்துக்கொண்டு ஈழத் தமிழர்களான எங்களுக்கு நிம்மதியான சிறந்த எதிர்காலத்தையும் தமது மக்களின் அபிலாசைகள் மற்றும் உரிமைகளைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொருளாதாரம் என்னும் ஆயுதம் எதிர்காலத்தில் தமிழர்களின் இருப்பை வலுப்பெறச்செய்வதற்கான வழியமைத்துக்கொடுக்கும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மேலும் தெரிவித்துள்ளார் . (05)



காலைக்கதிர் Kalaikkathir

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

# Jaffna International Trade Fair
# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

14th EDITION

JITF 2024

JANUARY ஜனவரி

19 20 21

10.00 மு.ப - 8.00 பி.ப

Muttraweli Grounds
(Next to Jaffna Fort)

முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)




Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

PLATINUM SPONSOR: DIMO THE PERFECT PARTNER
GOLD SPONSORS: ADRIAN SOLAR GREEN, NIPPON CEMENT
MEDIA SPONSORS: PRINT – உதயன்; RADIO; TELEVISION – Capital; DIGITAL – காலைக்கதிர்
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH: CCIY

SILVER SPONSORS: Anchor, SOORYA, Hayleys Solar, 4ever, Darley Butler, Elephant House, KEELLS KREST, PHOENIX, RHINO, CBL Sera

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com www.jitf.lk jitf.lk

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.01.2024இல் வெளியிடப்பெற்றது.